
உ



யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகவும்
கனடா, மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட,

## அமரர்
## உயர்திரு. பொன்னுத்துரை நடராஜா (வவா)


அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



ஓம் குருர் பிரம்மா குருர் விஷ்ணு
குருதேவா மஹேஸ்வரா
குருஸாஷத் பரப்பிரஹ்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எமது
# அன்புத்
# தெய்வத்தின்
# திருவடித்
# தாமரைகளுக்கு
# இந்நூல்
# சமர்ப்பணம்



மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
எல்லோருக்கும் நல்லவராய்
உயர்வான பண்பாளராய்
அன்புடனும் பண்புடனும்
பணிவுடனும் நாம்வாழ
அறிவுரைகள் பலகூறி
இன்சொற்பேசி
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட
எமது குடும்பச் சுடர்
உயர்திரு



பொன்னுத்துரை நடராஜா
அவர்களின் திருப்பாத கமலங்களுக்கு
இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிர்வளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிர்வளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

ஊரெல்லாங்கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க!
ஆறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்கசீர் அடியாரெல்லாம்

# திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# ஔவையார் அருளிச்செய்த
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதனீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூஷ்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# திருவாசகம்
# எட்டாம் திருமுறை

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம்என்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி - வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாச கம்என்னும் தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகளால் தில்லையில் அருளிச் செய்யப்பட்ட திருப்பொற் சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்!
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே!

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியா னாதனல் வேலன்றாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே!

காசணிமின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடையஅடிய வர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுநிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றி மற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் பேதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டு கொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே!

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே!

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொனு லக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே!

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

மையவர் கண்டமை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே!

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே!

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே!

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுந் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே!

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே!

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே!

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே!

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துநாமே!

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

தெய்வமே கருணைமிகு என் தலைவா!
காலமெல்லாம் உன்னோடு
காலடியில் வாழ்வதுதான் கோடி கோடி தவம்
என்று பாடிப்பாடி மகிழ்ந்தேனே
பாசக் கயிற்றினாலே என்னை
உமதாக்கிய போது பாதங்களில் பணிந்த என்னை
அள்ளி அணைத்தீரே!

அன்று தொட்டு ஒரு கணமேனும் பிரிந்தியாத நீர் இன்று
என்னை பரிதவிக்கவிட்டு பரலோகம் சென்றதேன்? உம்
அன்பாலே அகமகிழ்ந்து வாழ்ந்தேனே!
பூவோடு பொட்டும் புன்னகையும் பொன்னகையும்
எந்தனுக்கே சொந்தமென
எத்தனை சொல்லியிருக்கின்றீர்
அத்தனையும் ஒரு கணத்தில் அனியாயமாய் போயிற்றே
அனுதினமும் அழுகையுடன் இறைவணக்கம் பாடி
உங்களையே நினைந்து உங்கள் நினைவால் துயருறும்

- அன்பு மனைவி

## மகன் புலம்பல்

பாசமிகு அப்பாவே! எத்தனை பிறவி எவர் எடுத்தாலும்
இவ்வுலகில் எனக்கு பாசமுள்ள தந்தைபோல்
யார் கிடைப்பார்?

என் இனிய அப்பாவே!
தேடுகின்றேன் உங்களை! எங்கு சென்றீர்கள்?
நெஞ்சம் ஏங்குதப்பா! இதயம் தவிக்குதப்பா!
உங்களை காணாது
எப்போது இனி காண்பேன்?
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

- உங்கள் பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர்மார் புலம்பல்

எங்கள் குடும்பத்தில் வந்துதித்த
ஒளி விளக்கே எங்கள் அத்தான்!
எங்களுக்கு உறுதுணையாய் இருப்பீரென
என்றும் நினைத்திருந்தோம்
எம்முடன் தொலைபேசியில் கதைத்தது
அத்துடன் உங்கள் ஒலி அடங்கிவிட்டது
உங்கள் ஒலி இனி என்று கேட்கும்?
என எதிர்பார்த்திருக்கின்றோம் அத்தான்!
ஆண்டவன் அழைத்து விட்டான் உங்களை.....

உங்கள் பிரிவால் துயருறும்
- மைத்துனர்மார்

## மைத்துனிமார் புலம்பல்

பண்பாலும் பாசத்தாலும் பிரிவாலும்
எம் தந்தைக்கு ஒப்பானவரே!
அந்நியரின் கொடுமையால் ஈழத்தில் பிரிந்தோமே!
எமக்கு உதவியாய் என்றும்
இருப்பீரென எதிர்பார்த்து இருந்தோமே!
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீரோ?
எதிர்பாரா செய்தி கேட்டவுடன்
நம்பமுடியாது நாமெல்லாம்
திகைத்து நிற்கின்றோம்!
சொல்லாமல் எங்கு சென்றீர்?

ஆறாத்துயரில் அல்லலுறும்
- மைத்துனிமார்

## மாமன் மாமியார் புலம்பல்

எமதருமை மருமகனே எங்கு நீர் சென்றீரோ?
அரும் பொருளே வார்த்தையேதும் கூறாது
தூரவழி சென்றதற்கு நாம் செய்த குற்றமென்ன?
எமக்கு தலைவனென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எதிர்பார்த்து இருந்தோமே
உமதருமை மகனையும் மனைவியையும்
பரிதவிக்க விட்டு எங்கு நீர் சென்றீரோ?
எங்கள் விருட்சம் விழுந்ததையா....!
விழுதுகள் நாம் என்ன செய்வோம்?
உங்கள் திருமுகம் காணாது
உள்ளமெலாம் உருகுதையா!

சொல்லாணத் துயருறும்
மாமன் - மாமி

## தாயார் புலம்பல்

அன்பு மகனே! என் அருமை ராசா!
உன்போல் மகனை இனி எப்போ காண்பேன்?
குடும்பம் அனைத்திற்கும் வழிகாட்டி நீயன்றோ!
குடும்பக் குலவிளக்கே என் இனிய மகனாரே!

என்ன பாவம் செய்தேனோ உன்னை இழக்கவுமே
நின் பூதவுடல் பார்க்க முடியாதா பாவியானேனே!
என் கண்ணீர் உதிருதையா எல்லாம் உனக்காக!
இறைவனார் திருவடியில் சாந்தி நீ பெறுவாயே!

## சகோதரர்கள் புலம்பல்

அண்ணன் தம்பி உறவெல்லாம் ஆழ்கடலில் மூழ்கியதோ?
எண்ணங்கள் எல்லாம் மணல் வீடாய் சாய்ந்ததுவோ?
மண்ணில் வாழ்வெல்லாம் பொய்யாகி விட்டதையா
கண்ணான எம் உடன் பிறப்பே கண்ணீர் எம் காணிக்கை!

தென்றலென எம்மகத்தில் வீசிநின்ற காற்றல்லோ
ஒன்றல்ல இரண்டல்ல உன்னை எண்ணி நாமழுவதற்கு
கன்றைப் பிரிந்த பசுவென தாயவளும் வாடி நிற்க
மன்றிலாடும் பெருமானை நாடினையோ எம்முடன் பிறப்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள் புலம்பல்

எங்கள் உடன் பிறப்பே!
நாங்கள் எண்ணியும் கண்டறிய முடியாத
இன்ப உலகுக்கு இறையழைப்பை ஏற்றுச்
சென்று விட்டாய்!
நின் பிரிவுத் துயரை ஜீரணிக்க முடியாது
துன்பக் கடலில் மூழ்கி நிற்கின்றோம்.....!
உனது வாழ்க்கையிலே - நீ
தெய்வ நம்பிக்கை மிக்க ஒரு தியாகி!
அடுத்தவருக்குத் தீங்கு நினைக்காத உத்தமர்!
நேர்மைப் போக்குடன் இறுதிக் காலம்வரை
வாழ்ந்து நின்றாய்!
நடந்த இடத்துப் புல்லும் சிலும்பாமல்
எமக்கொரு வழிகாட்டியாக நின்றாய்!
கொடிய காலன் இவ்விரைவில் நின்னுயிரைக்
கவர்ந்திடுவான் என நாம் எண்ணியிருக்கவில்லை
'அனைத்தும் இறை நியதி' என
ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் கூறியவாறு
'எப்பவோ முடிந்த காரியம்'
'ஒரு பொல்லாப்பும் இல்லை' என
நின்வாழ்வும் முடிந்துவிட்டது.
'யார்தான் இப்பூவுலக வாழ்வில் தொடர்ந்து வாழப்
பிறந்தவர்கள்' எனும் தேற்றத்துடன்
தங்கள் ஆத்ம சாந்திக்காகக்
கண்ணீரோடு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## பெரியப்பா பற்றி சிலவரிகள்........

நேற்று வாழ்ந்திட்ட பெரியப்பா
இன்று இல்லையே என்று எண்ண முடியவில்லை!
விண்ணாரப் பறந்து எம்மிடம் சுவிஸ் வந்தீர்கள் - இன்று
விண்ணிற்கே பறந்து சென்றதேன்? பெரியப்பா!
நேற்று வந்த பிஞ்சுகள் எம்மிடம் அன்புகாட்டி
நேரத்தோடு எம்மைவிட்டு சென்றதேன் பெரியப்பா!
ஆறவில்லை ஆறவில்லை அழுதாலும் தீரவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றுவார் யாருமின்றி செல்லப் பிள்ளைகள் - நாம்
வருந்துவது உங்கள் மனதைத் தொடவில்லையா?
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கும்

- பாசமுள்ள பெறாமக்கள்
சஞ்ஜீவன், சஞ்சிகா, சர்மிலன், சாயினி,
நிதுஷன், சரணியன், கிரிஷன்

## கடல் கடந்து வரும் கண்ணீர்ப் புஷ்பங்கள்!

எங்கள் அன்பான மாமா!
உங்கள்போல் மாமாவை இனி எப்போ நாம் காண்போம்?
"பெரிய மாமா" "பெரிய மாமா" என்று நாம்
அழைக்கும் குரல் உங்களுக்குக் கேட்காமல்
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
நீங்கள் மட்டும் எங்கு சென்றீர்கள்?
நாம் பிறந்தபோது எமக்கு வைத்த பெயரையும்
மார்மேலும் தோள்மேலும் வைத்தெம்மை சீராட்டியதையும்
உண்ணும் போதெல்லாம் மடிமீது எமை இருத்தி
ஊட்டிய சோற்றையும் சின்னச் சிட்டுக்களாய்
நாமிருந்த காலந்தொட்டு
இன்றுவரை எம்மோடு இருந்ததையும்
எதை நினைக்க...? எதை எழுத.....?
ஆறுதலுக்காய் சில வரிகள் - ஆனாலும்
எம் கண் மட்டும் தானாய்ச் சொரிகிறது - கண்ணீரை
அறுபது வயதினில் நின் பயணம் புனிதப் பயணம் என்று -
எம்மை ஆற்றுவதற்காய் ஊரார் சொல்லுகினம்...!
எத்தனைதான் அறுபதுகள் ஆனாலும்
உங்களை இழக்க எம்மால் முடியாது
நீங்கள் கூடவே எங்களோடு வாழ்கிறீர்கள் என்பதுதான் நிஜம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்!

பாசமுள்ள மருமக்கள்
ஆதி, பபீன், சதுஷ்யன், இரவிநாத், இரகுநாத்,
இரமணன், தயாளினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் அறத்துறைகள்

'சமயம்' எனக் குறிப்பிடுமிடத்து நடத்தையையும் அறிவினையும் விரிவான முறையிலே அது உள்பொருளாக சுட்டி நிற்கின்றது. இத்தகைய அறிவினைப் பெறுவதற்கே ஒழுக்கம் என்ற பாதையில் செயல்புரிய ஆரம்பிக்கிறோம். 'அறம்' என்பதனை இவ்வாறு மட்டும் கருதுவது கடினம். இறைவனை ஆதாரமாகக் கொள்வது சமயம். மனிதனை ஆதாரமாகக் கொள்வது அறம் எனக் கொண்டால் மனிதன் தனது நடத்தைகட்காக அறத்தினால் கண்காணிக்கப்படுகின்றது என்பது அர்த்தமாகும். வேதகால 'ரிதம்' என்னும் பிரபஞ்ச அறம் அல்லது இயற்கை ஒழுங்குக் கோட்பாடும் இந்த சிந்தனையினையே புலப்படுத்துகின்றது.

அற ஒழுங்குபற்றி விளக்குமிடத்து நன்நெறிகள் ஒருபோதும் அறியமுடியாதவற்றினை உபதேசிப்பதில்லை. இறைவனிடம் நம்பிக்கையற்றவனை 'நாஸ்திகன்' என புராதன சமயம் கூறுகிறது. ஆனால் 'தன்னம்பிக்கை' அற்றவனையே 'நாஸ்திகன்' என நவீன இந்துமதம் குறிப்பிடுகின்றது. "நூல்களை விதம் விதமாக விளக்குவதும் சொற்களை மாற்றி மாற்றி உச்சரிப்பதும் உரை செய்வதும் அறிவாளிகளது இன்பத்திற்கே உதவும். ஆத்ம விடுதலைக்கு உதவாது" என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனை இலக்கிய இன்ப முடையார்க்கு மிகவும் பொருத்தமானதே. அவ் ஒழுக்க விதிகட்கமைய நடவாது போனால் கடமைகளைக் கைவிட்டுவிட்டோம் என்பதே அர்த்தமாகும். இவை பற்றித் தெளிவாக விளக்கக் கூடியது சமய ஒழுக்கமானதாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் தனி ஒரு சமயத்திற்கு அல்லது தருமத்திற்கு ஏற்றதும் இறைமைக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதனை விளக்கக்கூடியதும் சமயம் ஒன்றுதான். அதனால் அறத்தின் மேலாண்மையை விளங்கிக் கொள்ளும் ஒரு பகுதியாக - ஒழுக்கவியலாக அமைகின்றது.

"பண்டு நால்வருரைத் தருளில் பல்லுலகினில் வாழ்க்கை......" என நாயன்மார் காட்டிய அறவிழுமியம் ஒழுக்கத்திலேதான் நிலைபெறுகின்றது.

சித்தாந்த சைவநெறியானது நடைமுறையில் தன்னை ஒரு சமய மார்க்கமாகவும் செயல் வடிவில் ஒரு ஒழுக்க விழுமி யங்களை நடைமுறைப்படுத்துவதாகவும் அறிவுத் துறையிலே தன்னை சைவசித்தாந்த தத்துவமாகவும் நிலைபெறச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளதெனலாம். சைவம், அன்புநெறி - அது சிவம். அந்த அன்பு அறத்திற்குக் கட்டுப்பட்டு செயலாற்றும் ஆற்றல் சக்தி வாய்ந்தது. அதன் அறத்துறைகளைச் சிவஞான சித்தியார் பின்வருமாறு வகைப்படுத்தும்.

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானம் வந்தித்தல் வணங்கல் வாய்மை
இழுக்கிலாத அறங்காணல் இரங்குவான் பணியறம்"

என்றவாறு இத்தகைய அறப்பண்புகளை ஒருவன் வாழ்வில் கடைப்பிடிப்பானேயானால் அவனுக்கு இரங்கி அன்பு செய்வது இறைவனுக்குரியதொரு அறமாகும் என்பது இயற்றினால் தெற்றெனப் புலப்படும்.

ஆகையினால் மேன்மைகொள் சைவநீதியே மிகு சைவத்துறை விளங்கவும் நான்மறை அறங்கள் ஓங்கவும் திரு முறைகளிலும் சைவத்தின் ஒழுக்கத்துறைகள் சிறப்பாகப் பேசப் பட்டுள்ளது. அவற்றினை 'ஸ்மிருதிகள்' சொன்ன வழிமூன்றும் புக்கும் ஆச்சிரமம் பலகடந்து அருந்தவங்கள் புரிந்தும் சிறப்புடைப் புராணங்களுணர்த்தும் வேத சிறப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றார் சைவத்திறத்தடைவர். அதில் சரியை, கிரியை, யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர் என்பது சித்தாந்த நூல்கள் வாயிலாக சைவ மார்க்கத் தில் நிற்பவர்க்கு - நிற்க விழைபவர்க்கு சைவம் காட்டும் அறவழிப் பாதையாகும். எனவே சைவ நான்மார்க்கங்கள்தான் சாதாரண மனிதர்கள் பின்பற்றுவதற்கேற்ற பாதை எனத் தெரிந்து நாயன்மார் அதனை வாழ்ந்து காட்டிச் சென்றனர்.

மனம் போன போக்கில் வாழாது குறித்த ஒரு ஒழுங்கு நிலையில் தன்னை செலுத்துதல் (நடத்தை) எனப்படும். அவ்வாறு நடந்து செல்வதற்கு ஒரு பாதை - வழி வேண்டும். அதுவே சைவத்தின் அறத்துறைகளாக - நாற்பாதமாக - நால்வகை வழிகளாக விளக்கப்பட்டுள்ளன. அதனை

"சங்கரனையடையும் மார்க்கம் நான்கவை
சரியை கிரியை யோகம் என நவிற்றுவதும்
செய்வர் பின் ஞானத்தால் திருவடியைச் சேர்வர்"

எனச் சித்தியார் வழிப்படுத்தியுள்ளார். இதன் பலாபலன் களைத் திருமந்திரம்

"சார்ந்த மெய்ஞானத்தோர் தானவனாயினோர்
சேர்ந்த வெண்யோகத்தோர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோன் அர்ச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையே நீதிலாத்தோரே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நால்வகை நெறிகளின் தாற்பரியத்தினை விளக்கியுள்ளது

இறைவனின் ஆற்றல் சக்தி இரண்டு வகையில் தொழிற்படுவதாக சித்தாந்தம் கூறும். ஒன்று செயல் மற்றது அறிவு. ஒரு தொழிலைச் செயற்படுத்துவது கிரியாசக்தி. அத்தொழில் தொடர்பாக அறிவினை வழங்குவது ஞானாசக்தி. இவற்றிலே செயல் வழியினை சைவம் சரியா, கிரியா மார்க்கம் எனவும் அறிவு வழியினை யோக, ஞானா மார்க்கம் எனவும் விளக்கும். இவற்றினை வேத வழியில் சிந்தித்தால் முன்னதை கருமகாண்டத்திற்கும் பின்னதை ஞான காண்டத்திற்கும் குறிப்பிடலாம். சைவம் கூறும் நால்வகை வழித்துறைகளில் மொத்தம் பதினாறு படி நிலைகள் உள்ளன. சரியையிற் சரியா முதல் சரியையில் ஞானமீறாக ஞானத்தில் சரியை, ஞானத்தில் ஞானம் என அவை விரிந்து அறத்துறைகளில் மக்கள் வாழ்வினை நெறிப்படுத்திச் செல்லத்துணை நிற்பவையாகும்.

இவற்றிலே குரு சங்கம வழிபாடு ஒன்பது வகைகளான தீட்சா முறைகள் யாவும் அடங்குவதுடன் அவை யோக மார்க்கம், ஞான மார்க்கமாக உயர்வடையும்போது சரியை, கிரியைத் தொண்டுகளும் அவற்றிற்கேற்ப பரிமாணம் பெற்று உயர்கின்றன. அந்தத்துறையில் பயிற்சி பெற்று சாதனை செய்வோர் பிறர்துயர்கண்டு உதவுதல், முதியோர்களைப் பராமரித்தல், பெற்றோர்களை அரவணைத்தல், ஆதரவற்ற சிறுவர் நலன்களைக் கவனித்தல், இலவசக்கல்வி அளித்தல், பொருளுதவி வழங்கல், வைத்தியசாலையில் ஆதரவற்ற நோயாளரைப் பராமரிக்க உதவி வழங்கல், சீதனக் கொடுமை யால் வாழ்விழந்தோருக்கு வாழ்வு கொடுத்தல், ஊனமுற்றோ ரை ஆதரித்தல் போன்ற சமூகசேவைப் பணிகளால் தமது ஞான சாதனைகளை அன்பின் பரவலாகத்தினால் முதிர்ச்சி அடையச் செய்வதே ஞான சாதனை எனப்படும். "அன்பின் வழியது உயர்நிலை' என்பதும் "சைவம் என்றால் சிவம், சிவம் என்றால் அன்பு" எனவும் பேசுவதுடன் மட்டும் நின்றுவிடாது அவற்றினை செயல் வழி சாதனைக்குக் கொண்டு வந்தால் அதுவே சரியா, கிரியா மார்க்கத்தின் நோக்கத்தை முழுமை அடையச் செய்யும்.

"ஞானம் என்பது பொய் தவறு முதலிய குற்றங்களினின்றும் நீங்கிய அறிவாகும். அதனையடைந்தவர்க்கே என்றுமுள்ள சிவஞானமாகிய வீடுபேறு சித்திக்கும்" என பௌஷ்கராகமமும் தெளிவுபடுத்தியது.

அறநெறிகளைப் பயின்று பயிற்றுவித்து போதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது மட்டுமன்றி அதனைப் பயின்றோர் மேல்வரும் நெறிகளில் ஒரு வழியினைக் கடைப்படித்தும் சாதனை படைக்கலாம். சரியா கிரியா மார்க்கத்தில் வாழ்ந்த தேவாரகால நாயன்மார்களும் மெய்யடியார்களும் வாழ்ந்து காட்டிச் சென்றனர்.

"நன்நெறிக்குய்ப்பது நமச்சிவாயவே"

"நமசிவாயவே நன்னெறி காட்டுமே"

"புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விடுத்து மேலாம்
நன்நெறி யதனிற் சென்று நவையறுகாட்சி நல்கி"

என எமது சமயச் சான்றோர் சொல்லிச் சென்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக எதுவும் செய்ய வசதி இல்லையென்றாலும் தமது தினசரி கடமைகளை வீட்டிலும் வெளியிலும் தத்தம் தொழில் புரியுமிடங்களிலும் முறைப்படி ஆற்றிவந்தாலே தினம் தோறும் இறைவனை வழிபடுவதற்குச் சமமாகும் என்பதனை பகவத்கீதையும் 'யோக கர்மா கௌசல்யாம்' என்றவாறு கடமையே வழிபாடு என ஆமோதிக்கின்றது

இத்தகைய வழியில் அறத்துறைகளைப் பேணி தொடரப்போகும் வாழ்வை வலிமையும் வளமும் பெறச் செய்வதே அறவழிப்பட்ட சமயவாழ்வின் இலக்காக அமையவேண்டும்.

"வையகமும் துயர் தீர்க்கவே"

**குறிப்பு:**

எமது மைத்துனர் திரு. பொ. நடராஜா அவர்கள் "ஊருக்கு உழைத்த உத்தமர்" என்பதனை கடந்த இருபது வருடங்களாக நேரில் கண்டும் பலரிடம் அறிந்தும் மனதிற்குள் போற்றியிருக்கிறேன். " நல்லவர்கள் நீண்டநாள் வாழ்வதில்லை" என்பதுபோல் அன்னாரின் திடீர் மறைவு எம்மை எல்லாம் உலுக்கிவிட்டது. அவர் தமது பொது வாழ்வில் மேற்கொண்ட மனிதநேயப் பணிகள் பல. அவற்றினை மென்மேலும் நாமும் சமூகமும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய ஒன்றுதான் நாம் அன்னாரிற்குச் செய்யும் அஞ்சலியாகும். அதன் விளைவாகவே சமயப்பணிகளூடாக எவ்வாறு அறப்பணிகளை ஆற்றமுடியும் என்ற இச் சிறுகட்டுரை அன்னாருக்குக் காணிக்கையாக்குவதில் அமைதி காண்கிறோம்.

திருமதி. கலைவாணி இராமநாதன்
தலைவர் / இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாது
# எம் மனத்தினுள் நிறைந்து நிற்பவர்
# அமரர் பொ. நடராஜா (வவா)

இயற்கை வளமும் ஆன்மீகச் சிறப்பும் நிறைந்த ஈழத்திரு நாட்டில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் தாவடி என்னும் கிராமத்தில் வவா தம்பி பிறந்து வளர்ந்தார். 'வவா' என்பது அவருடைய செல்லப் பெயராகும். அவர் எங்களுக்கு உடன் பிறவாச் சகோதரர் ஆவார். அவர் எங்களோடு கூடி பிறந்தவர் போன்று பழகி உதவிகள் செய்து தருவார். நாம் எல்லோரும் அவரை 'வவா' என்றே அழைத்து வந்தோம். நாம் மட்டுமல்ல ஊரிலே உள்ள பெரியோர், சிறியோர், குழந்தைகள் அனைவரும் அன்புடன் 'வவா, வவா அண்ணை, வவா மாமா' என்றே அழைப்பார்கள்.

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத் திவ்வுலகு"**

என்ற குறள்பாவை உண்மையென நிருபித்து விட்டவர் எங்கள் வவாதான். ஏனெனில் நோய் நொடி என்று படுக்கையில் கிடவாமல் சடுதியாக எங்களை எல்லாம் தவிக்கவிட்டு அதிர்ச்சியடையும்படி அந்நிய நாட்டில் திடீரென இவ்வுலக வாழ்வை நீத்தார். இத்துயரச் செய்தியை நாம் அறிந்து துடி துடித்துப் போய் விட்டோம்.

வவா எப்பொழுதும் எல்லோரோடும் அன்பாகவே பழகுவார். பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் உள்ளவர். எப்படிப்பட்ட செயல்களிலும் தான் முன்னின்று செய்யும் காரியவாதியாவார். எவ்வளவு கஷ்டமான வேலையாய் இருந்தாலும் தனது மனவுறுதியோடு செய்து முடிப்பார். இவருடைய தந்தையார் இவரின் இளவயதில் இறந்து விட்டார். குடும்பப் பொறுப்பைத் தானே ஏற்று திறம்படச்செய்து முடித்தார். தன்னுடைய இளைய சகோதரியின் திருமணம் முடிந்த பின்பே தனது திருமணம் என்று சொல்லிப் பிடிவாதமாய் இருந்தார். சகோதரிக்கு ஒரு நல்ல துணையைத் தேடி மணம் முடித்து வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுத்தான் தனது இல்வாழ்க்கையில் புகுந்தார். புகுந்த வீட்டில் மாமனார், மாமி, மைத்துனர், மைத்துனி அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் மனங்கோணாமல் செய்து வந்தார். அவர்களையும் எங்கள் எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மறைந்தது பெரும் அதிர்ச்சியாகி விட்டது.

இவர் ஒரு ஆன்மீகவாதியுமாவார். கோயில்கள் எல்லாவற்றிலும் முன்னின்று செய்ய வேண்டியனவற்றை செய்வார். தாவடி வேத விநாயகர் ஆலயத்தில் தன் எண்ணப்படி பல தொண்டுகளைச் செய்தார். கோவில் திருவிழாக் காலங்களில் சரீர உதவிகளைச் சலிக்காமல் அலுக்காமல் செய்யும் ஒரு நல்ல குணவாளன் ஆவார். ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையும் இறைபற்றும் உள்ளவர். இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றை மனத்திற் கொண்டு நடப்பவர். பிறந்த நாட்டில் தனது தொழிலைச் சிறப்பாகச் செய்து வந்தார். வெளிநாடு சென்றும் இவர் தனது கடமையைச் சிறப்பாகச் செய்து வந்தார். இவருக்குத் தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசவரும். இதனால் இவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புத் தேடி வந்தது.

பாரத நாட்டில் உள்ள சிவத் தலங்களுக்கு ஸ்தல யாத்திரையை இவருடைய மனைவியார் திருமதி சர்வாம்பிகாதேவியுடன் சென்று வந்தார். சில ஆண்டு களுக்கு முன்னர் இவருக்குப் புதல்வன் பிறந்தான். பெரியோர், பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் எல்லோரிடமும் பாசத்துடன் நடந்து கொள்வார்.

7.11.2002ல் இவருடைய பூதவுடல் மறைந்து விட்டாலும் எங்களுடைய உள்ளங்களில் இருந்து மறையப் போவதில்லை. அவர் இன்றும் எங்களுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

திருமதி. மகேஸ்வரி அரியரத்தினம்
(பெரியக்கா)
தாவடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. பொன்னுத்துரை நடராஜா (வவா) அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

சங்கங்கள் கூட்டி வளர்த்து சபையேறி ஆட்சி கண்ட மூத்த மொழியாம் தமிழ் மொழியும் சிவநெறியும் ஒருங்கே வளரும் ஈழத் திருநாட்டின் வடதிசையில் நீராலே முத்தொடர்பும் கொண்ட யாழ்ப்பாணத்திற்கு வடமேற்காய் அமைந்துள்ளது தாவடிக் கிராமமாகும். இங்கு படித்தவர்கள் நிறைந்திருந்த போதும் விவசாயம், வியாபாரம் செய்வதில் அனுபவம் பெற்றோர் அனேகர் உள்ளனர்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கமைய தோன்றியவர்தான் கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. சண்முகம்பிள்ளை பொன்னுத்துரை அவர்கள். அன்பால், பண்பால் உயர்ந்து "மேன்மைகொள் சைவ நீதி" என்ற குறிக்கோளைக் கொண்டு வாழ்ந்த பெருமகனார் ஆவார். இவர் மட்டக்களப்பில் நீர்ப்பாசன ஓவசியராய் இருந்த காலத்தில் தாவடியைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை வர்த்தகரின் இளைய மகளான இரத்தினம்மாவைத் திருமணம் செய்தார். இவர்கள் இல்லறமும் நல்லறமாய் வாழ்ந்த காலத்தில் திரு. நடராஜா (வவா) மூத்த புதல்வராய் 17.9.1942ஆம் ஆண்டில் பிறந்தார். இவருக்குப்பின் விஜயலெட்சுமி, ஜெயலட்சுமி, விக்னராசா என்போர் பிறந்தனர். வவா தனது சகோதரன் சகோதரிகளைப் போலவே தனது பெரிய தாயின் பிள்ளைகளோடும் அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து வந்தார். "விளையும் பயிரை முளையில் தெரியும்" இளம் வயதில் அறிவும் நல்ல பண்பும் எந்த வேலையையும் சிரத்தையோடு நேர்மையாகச் செய்யும் குணம் படைத்தவராவார். இவர் ஆரம்பக் கல்வியைத் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பயின்றார். உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியில் கற்றார். சிறுவயதிலிருந்து இவரிடம் மிகுந்த தெய்வ பக்தி காணப்பட்டது. தாவடி வேத விநாயகரை ஒவ்வொரு நாளும் தவற விடாமல் தரிசித்து தொண்டுகள் செய்து வந்தார்.

இவர் பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் தனது திறமையைக் காட்டினார். விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளும் பாராட்டுப் பத்திரங்களும் பெற்றுக் கொண்டார். அக்காலத்தில் ஏராளமான நண்பர்கள் இவரோடு அன்பாய் இருந்தனர். இவருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளர் பதவி தாவடிக் கிளையில் கிடைத்தது. இக்காலத்தில் தனது மூத்த சகோதரியான விஜயலட்சுமிக்கு சிறுவிளானைச் சேர்ந்த திரு வைத்திலிங்கம் அம்பலவாணர் அவர்களுக்குப் பெற்றோருடன் சேர்ந்து திருமணம் செய்து வைத்தார். திரு. அம்பலவாணர் துணுக்காய் ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் முகாமையாள ராகக் கடமையாற்றினார்.

1979ஆம் ஆண்டு ஈராக் நாட்டிற்குப் பயணமானார். அந்த நாட்டில் இவருக்கு நீர்ப்பாசனப் பகுதியில் மேற்பார்வை யாளர் வேலை கிடைத்தது. 1981ஆம் ஆண்டு இளைய சகோதரியான ஜெயலட்சுமிக்கு மண்டைதீவைச் சேர்ந்த திரு. செல்லத்தம்பி பரமநாதன் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார். திரு. பரமநாதன் இ.போ.சபை ஊழியராய் கடமையாற்றினார். இவர் கவிஞர், எழுத்தாளர், பிரபல சமூக சேவையாளருமாவார்.

இவர் 1983ஆம் ஆண்டு கொக்குவில் மேற்கு மணியர் பதியைச் சேர்ந்த திரு. கந்தசாமி இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வியான சர்வாம்பிகாதேவியைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குப் பல ஆண்டுகளின்பின் செல்வப் புதல்வன் ஒருவன் பிறந்தான். இவனுக்கு 'கோபிநாத்' என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். 1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி பிறந்த கோபிநாத் கல்வியிலும் தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்குகின்றான்.

வவாவின் மனைவியின் சகோதரர்களான கமலேஸ் வரன், சிவனேஸ்வரன் சகோதரிகளான நிர்மலாதேவி, லலிதாதேவி என்போரிலும் அன்பு வைத்து வாழ்ந்து வரலானார். இவர் 7.11.2002 வியாழக்கிழமை கனடாவில் மொன்றியல் நகரில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் மாரடைப்பால் மனைவி, மகன் கதறியழ 60வது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவருடைய ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருப்பாதங்களைப் பிரார்த்திப் போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செ. பரமநாதன் (மைத்துனர்)
ஸ்ரீ சாயி தொலைத் தொடர்பகம்
தாவடி, கொக்குவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவடிக் கிராமத்தைப் பற்றி சிந்தித்த ஒருவர்...

தாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு காலத்திற்குக் காலம் புதிய புதிய இளைஞர் குழுவினர் சேவையாற்ற முன்வருவது தாவடிப் பிள்ளையாரின் ஒரு அற்புதம். அது இன்றுவரை தொடர்கிறது. அவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் சிறப்பாக மிளிர்வதை நாம் கண்கூடாகக் கண்டறிகிறோம். 1960ஆம் ஆண்டு காலப் பகுதியில் விநாயகரின் சேவைக்காக அவரால் அழைக்கப்பட்டவர் களில் ஒருவர்தான் "வவா அண்ணை" என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் நண்பர் S.P. நடராஜா அவர்கள்.

கிராமத்தில் முதன் முதலாக விளையாட்டுப்போட்டி ஒன்று தொடர்ச்சியாக சுமார் 5 வருடங்களுக்கு மேலாக நடாத்தப்பட்டது. "ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகம்" என்ற ஒரு விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்து விளையாட்டுப் போட்டி, கிரிக்கட், உதைபந்தாட்டம், வொலிபோல் ஆகிய பலவித போட்டிகள் நடைபெற்று வந்தன. இதனை ஆரம்பிக்கப் பெரிதும் முயன்றவர் க.த. இராமநாதன் அவர்கள். அவருக்கு வலது கரமாக இயங்கியவர் "வவா அண்ணன்". உதைபந்தாட்டத்தில் கோல் காப்பாளராக மிளிர்ந்தவர். கடைசியாக யாழ்ப்பா ணத்தைத் தரிசிக்க வந்தபோது தனது பழைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

தாவடி ஐக்கிய நாணய சங்கம்தான் ஆரம்பத்தில் கூப்பன் வினியோகம் நடாத்தி வந்தது. காலஞ்சென்ற க.கு. தம்பையா (தில்லைநாதர்), சு. இராமலிங்கம் ஆகியோரும் இவரும் பல சிரமங்களுக்கு மத்தியில் இந்த வினியோகத்தை நடாத்தி வந்தனர். அவர்களுக்கு உதவியாக இருந்தவர் "வவா அண்ணை". பின்னர் அது சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின் 11வது கிளையாகச் சேர்க்கப்பட்டபோது அவர் கிளை முகாமையாளராக்கப் பட்டார். பொருள்கள் தட்டுப்பாடான நேரத்தில் தம்மால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்றளவு தட்டுப்பாடான பொருட்களைத் தேடி எடுத்து வந்து விநியோகித்தார். சைக்கிள் ரயர், துணி வகைகள், பாண், சீனி இப்படி எத்தனையோ தட்டுப்பாடுகள். அந்த நேரங்களில்தான் வவா அண்ணையின் திறமையைக் காணமுடியும். பாண் தட்டுப்பாடான காலத்தில் அதி காலை 4.30 மணிக்கு பாணை எடுப்பதற்காகக் குளிருக் குள் சென்று பாணை எடுத்து வந்து கியூவில் நிற்கும் மக்களுக்கு வினியோகித்ததை மறக்க முடியாது; அது ஒரு மனிதாபிமான சேவை.

தாவடி ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் இல்லாமல் தனியார் வீடு, கோயில் பொங்கல் அறை எனப் பல இடங்களுக்கு இடம் மாறிக் கொண்டு திரிய வேண்டிய வேளையில் பல சிரமங்களை எதிர் நோக்கியவர் வவா அண்ணை.

இப்படியாகக் கோவிலுக்கும் பொது மக்களுக்கும் சேவையாற்றுவதில் முன்னின்று உழைத்த ஒரு பெருமகன் வவா அண்ணை. அவருடன் பல சேவைகளில் இணைந்து ஈடுபட்டவன் என்ற ரீதியில் இதயம் அழுகிறது. விரைவில் மீண்டும் யாழ்ப்பாணம் வருவேன் எனக்கூறிச் சென்றவரின் மறைவுச் செய்திதான் வந்தது.

அவருடைய சேவைகள் அவரது குடும்பத்தை வாழவைக்கும். அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த் திப்பதுடன் அவரின் பிள்ளையையும் மனைவியையும் மனநிறைவுடன் வாழ வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கனத்த இதயத்துடன்
S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வவா" நினைவில்....!

காவியமாகி விட்டாய்
காவிய நாயகனே - வவா
என்றென்றும்
எங்கள் நெஞ்சைவிட்டு
நீங்காது
இடம் பிடித்து
நெஞ்சமெல்லாம்
நிறைந்து விட்டாய்

இயற்கை உனதழகை
ஜீரணித் திருக்கும் - ஆனால்
உன் திருமுகத்தை
எம் நெஞ்சினின்று
ஜீரணிக்க முடியவில்லையே.....!

என்றென்றும் உனது
நினைவின் நிழலோடு
போராடி
நாங்கள் சிந்தும்
கண்ணீர்தான்
இயற்கை தேவனுக்கு
காணிக்கை!

கவிஞர் செ. பரமநாதன்
மண்டைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# வேதவிநாயகர் திருவடியை சரணடைந்த அமரர் பொ. நடராஜா அவர்கள்

திரு. பொன்னத்துரை நடராஜா அவர்களை நீண்ட காலமாக அறிவேன். வேதவிநாயகர் ஆலயத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். ஆலயத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தார்.

ஆலயத்தின் பொங்கல் அறையில் சிலகாலம் ப.நோ.கூட்டுறவுச் சங்கம் இயங்கியபோது அவர் முகாமையாளராக இருந்தார். அதே காலத்தில் ஆலயத்திற்குப் பெரும் உதவியாக இருந்தார். தாவடியில் பொது விடயங்களில் முன்னின்று சேவைகள் செய்து வந்தார். அவரது இழப்பு எமக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.

அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது ஆத்மா சாந்தியடைய தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் என்றும் துணை நிற்பார்.

சிவஸ்ரீ கு. பரமசிவக்குருக்கள்
பிரதம குரு
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
வேத விநாயகர் ஆலயம்
தாவடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திய
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## திரு. பொன்னுத்துரை நடராஜா (வவா)

அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து எங்கள் இல்லங்களுக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

அஞ்சலி மண்டபத்திற்கு வருகை தந்து அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர்களுக்கும் மலர் வளையம் சாத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும் இரங்கலுரை ஆற்றியோருக்கும் தேவார பாராயணம் செய்தோருக்கும்,

இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி முதலியவற்றில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்,

தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்


4780 Vezina
Montreal, Quebec - Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R.J. Multilitho Inc. (905) 569-7883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org